# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,879/5—1969 නොවැම්බර් 14 වැනි සිකුරාදා—1969.11.14**

14,879/5 ம் இலக்கம்—1969 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

### விலைக் கட்டளைகள்

**உணவு விலைக்கட்டளை எம். டி. /8** — **மாட்டிறைச்சி.**

**விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்**

**கட்டளை**

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3(2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு மாத்தறை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) நனவதி அபேவிக்ரம ஆகிய நான் இக்கட்டளையால்,—

(1) 1967 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31 ந் திகதி வெளியான 14,763/8 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1967 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ந் திகதியைக்கொண்ட எம். டி./3/67 இலக்க உணவு விலைக்கட்டளையை இப்போதிருந்தே உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே அப்பத்திகளின் தலைப்பில் குறிப்பிடப்பட்ட விபரத்தையும் தரத்தையும் உடைய மாட்டிறைச்சி ஒரு இறுத்தல் அட்டவணையில் அவற்றிற்கிணைய 1 ம் பத்தியில் சொல்லப்பட்ட இடங்களில் அதற்கு மேல் விற்கப்படலாகா ஆகக்கூடிய விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக :—

(அ) " மாட்டிறைச்சி " என்னும் நாட்டு மாட்டினது அல்லது எருமை மாட்டினது சதை எவ்வகையான கழிவுப் பொருளையும் உள்ளடங்காது எனவும் ;

(ஆ) எம்மிருகத்தின் சடலமேனும் கொலைக்களத்தில் விற்பனைக்குத் தயாராக்கப்பட்டபடி (தலை, தோல், குளம்புகள், குடல், கழிவுகள், மற்றும் வழமையாகக் கழிக்கப்படும் எல்லாக் கழிவுப் பொருட்களும் தவிர) விற்கப்படும் பொழுது அவ்விற்பனை உயிரற்ற நிறையில் விற்பனையாகக் கருதப்படுதல்வேண்டுமெனவும் கட்டளையிடுகிறேன்.

(4) மாட்டிறைச்சி எலும்புகளுடன் விற்கப்படுமிடத்து அதனுடன் சேர்ந்த எலும்பின் நிறை விற்கப்படும் மொத்த நிறையின் 25 சத விகிதத்திற்கு மேற்படலாகாது என்றும் கட்டளையிடுகிறேன்.

(5) இதற்குள்ள அட்டவணையின் 1 ம் பத்தியில் குறிப்பிடப்பட்ட இடப்பரப்பில் எவ்விடத்திலேனும் அவ்வட்டவணையில் குறிப்பிடப்பட்ட விபரமும் தரமும் கொண்ட மாற்றிறைச்சியைத் தம்வசத்தில் வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அவ்விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சிக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைக்க வேண்டுமென கட்டளையிடுகிறேன்.

(6) மாட்டிறைச்சி விற்பதற்கென ஒதுக்கப்பட்டுள்ள கடைகளில் மாத்திரம் மாட்டிறைச்சி விற்கவோ அல்லது விற்பனைக்காக வைத்திருக்கவோ வேண்டுமென்றும் இக்கடைகளில் குறிப்பிட்ட விபரமும் தரமும்கொண்ட மாட்டிறைச்சியன்றி வேறெந்தவகையான இறைச்சியும் விற்கக்கூடாதெனவும் கட்டளையிடுகிறேன்.

(7) இதற்குள்ள அட்டவணையில் 1 ம் பத்தியில் குறிப்பிட்ட இடப்பரப்பிலுள்ள எவ்விடத்திலாவது குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்ட விபரமும் தரமும் கொண்ட மாட்டிறைச்சியை விற்பனைக்கு வைத்திருக்கும் வியாபாரி ஒவ்வொருவரும் அத்தகைய மாட்டிறைச்சி விற்கப்படும் அக்கடையில் அத்தகைய விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சிமட்டுமே விற்கப்படுகின்றது என்னும் பொருள் கொண்ட அறிவித்தல் ஒன்று பகிரங்க பார்வைக்கு வைத்தல் வேண்டும் என்றும் கட்டளையிடுகிறேன்.

(8) ஒரு விற்பனையில் எலும்புடனோ எலும்பில்லாமலோ மாட்டிறைச்சியுடன் கழிவுகளும் விற்கப்படின் மாட்டிறைச்சி எலும்புடனோ எலும்பில்லாமலோ கழிவுகளிலிருந்து வேருக நிறுத்துவிற்கப்படல் வேண்டுமெனக் கட்டளையிடுகிறேன்.

(9) மாட்டிறைச்சி விற்கும் ஒவ்வொரு வியாபாரியும், யாராகிலும் ஒருவர் மாட்டிறைச்சி கேட்டால் கழிவின்றி மாட்டிறைச்சி மாத்திரமே விற்கவேண்டுமென கட்டளையிடுகிறேன்.

(10) ஒவ்வொரு வியாபாரியும் மாட்டிறைச்சி விற்கும் பொழுது தன்னுடைய நிறுக்கும் தராசையோ தராசுகளையோ வாங்குபவர் தாம் வாங்கும் மாட்டிறைச்சியின் உண்மையான நிறையை இலகுவாக அறிந்து கொள்ளக்கூடிய விதமாக வைத்தல் வேண்டுமெனவும் கட்டளையிடுகிறேன்.

(11) இதற்குள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரத்தையும் தரத்தையும் கொண்ட மாட்டிறைச்சியை விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் மாட்டிறைச்சி வாங்குவோர் கேட்குமிடத்து அன்னருக்குப் பின் வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென்றுங் கட்டளையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சியின் நிறை ;

(இ) விற்பனை செய்யப்பட்ட மாட்டிறைச்சியின் விபரம் ;

(ஈ) விற்கப்பட்ட மாட்டிறைச்சிக்குக் கொடுக்கப்பட்ட விலை.

(12) இக்கட்டளையினால் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும், அவ்வட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருளை வேறெந்த இறைச்சியுடனும் மாமிசத்துடனும் கலந்து விற்றல் ஆகாதெனக் கட்டளையிடுகிறேன்.

(13) குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருள் விற்குமிடத்து அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(14) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு " என்பது நிறுத்தலளவை முறையின் " அவைார்டுபோஸ் " பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

1969 ம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ந் திகதி மு. ப. 11.00 மணிக்கு மாத்தறைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

என். அபேவிக்ரம,
உணவு விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்தறை மாவட்டம்.

அட்டவணை

**மாட்டிறைச்சியின் ஆகக்கூடிய விலை**

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>மாட்டிறைச்சி (எலும்பில்லாமல்) ஒரு இருத்தலுக்கான ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>மாட்டிறைச்சி (எலும்புடன்) ஒரு இருத்தலுக்கான ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. | பத்தி 4<br>(உயிரற்ற நிறை) மாட்டிறைச்சி ஒரு இருத்தலுக்கான ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| திக்குவல்லை கிராமச் சபை எல்லைப் பகுதியைத் தவிர்ந்து, மாத்தறை பரிபாலன மாவட்டத்தைச் சேர்ந்த எல்லாப் பகுதிகளும் .. .. .. | 1 10 | 1 0 | 0 92 |
| திக்குவல்லை கிராமச் சபை எல்லைப்பகுதி .. .. .. | 1 0 | 0 90 | 0 82 |

**குறிப்பு.**—மேற்குறித்த விலைகள் ஒரு இருத்தல் மாட்டிறைச்சி விற்கப்படக் கூடிய குறிப்பிட்ட விலைகளல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக மாட்டிறைச்சி விற்கலாகாது.

11—108/1

---

**உணவு விலைக்கட்டளை எம். டி. /9.** **ஆட்டிறைச்சி.**

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 3(2) ம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 4 ம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக்கொண்டு மாத்தறை மாவட்ட உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) நனவதி அபேவிக்ரம ஆகிய நான் இக்கட்டளையால்,—

(1) 1967 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 31 ந் திகதி வெளியான 14,763/8 ம் இலக்க அதிவிசேட இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமான 1967 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 25 ந் திகதியைக்கொண்ட எம். டி. /3/67 இலக்க உணவு விலைக்கட்டளையை இப்போதிருந்தே உடனடியாக நீக்கிவிடுகிறேன்.

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே அப்பத்திகளின் தலைப்பில் குறிப்பிடப்பட்ட விபரத்தையும் தரத்தையும் உடைய ஆட்டிறைச்சி ஒரு இருத்தலுக்குரிய ஆகக்கூடிய விலையாக, உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விவரிக்கப்பட்ட இடங்களில் அதற்குமேல் விற்கப்படலாகா ஆகக்கூடிய விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன்.

(3) இக்கட்டளையின் நோக்கத்திற்காக :—

(அ) " ஆட்டிறைச்சி " என்றால் செம்மறி ஆட்டின் அல்லது வெள்ளாட்டின் மாமிசத்தைக் குறிப்பதாகும், எல்லவிதமான கழிவுகளும் தவிர்ந்ததாகும் ;

(ஆ) விற்பனைக்குத் தயாராக ஆடடிக்கும் தொட்டியிலிருந்து செம்மறி ஆட்டின் அல்லது வெள்ளாட்டின் சடலம் (தலை, தோல், குடல், குளம்புகள், மற்றும் எல்லாவிதமான வழமையாகக் கழிக்கப்படுபவைகள் தவிர்ந்த) மற்றவை விற்பனை செய்யப்பட்டால் அது " உயிரற்ற நிறையாக " கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) ஆட்டிறைச்சி எலும்புடன் விற்கப்படுமிடத்து, எலும்புகளின் நிறை மொத்தமாக விற்கப்படும் நிறையின் 25 சத வீதத்திற்கு மேற்படல் ஆகாது என்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையினால் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரத்தையும் தரத்தையும் கொண்ட ஆட்டிறைச்சியைத் தம்வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது வாகனத்திலாவது பாத்திரத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு, வியாபாரியும், அவ்விடத்தில், அவ்வாகனத்தில், பாத்திரத்தில், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரத்தையும் தரத்தையும் கொண்ட ஆட்டிறைச்சிக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகளைக்காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) ஆட்டிறைச்சியுடன் கழிவுகளும் விற்கப்படின் ஆட்டிறைச்சி கழிவுகளிலிருந்து வேருக நிறுத்து விற்கப்படல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) ஒவ்வொரு வியாபாரியும் ஆட்டிறைச்சிவிற்கும் பொழுது தன்னுடைய நிறுக்கும் தராசையோ, தராசுகளேயோ ஆட்டிறைச்சி வாங்குவோர் கேட்குமிடத்து தாம் வாங்கும் ஆட்டிறைச்சியின் உண்மையான நிறையை இலகுவாக அறிந்து கொள்ளக்கூடிய விதமாக வைத்தல்வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(8) அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரத்தையும் தரத்தையும்கொண்ட ஆட்டிறைச்சியை விற்கும் ஒவ்வொரு வியாபாரியும் ஆட்டிறைச்சியை வாங்குவோர் கேட்குமிடத்து, அன்னுருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டுமென்று ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி;

(ஆ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சியின் அளவும் (நிறையில்);

(இ) விற்பனை செய்யப்பட்ட ஆட்டிறைச்சியின் விபரமும்;

(ஈ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சிக்குக் கொடுக்கப்பட்ட விலை.

(9) இக்கட்டளையினல் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருளை வேறு எந்த இறைச்சியுடனும், மாமிசத்துடனும் கலந்து விற்றல் ஆகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(10) குறித்த அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள பொருள் விற்குமிடத்து அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன்விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(11) இக்கட்டளையின் நோக்கத்திற்காக "இருத்தல்" அல்லது "இரு" என்பது "அவோர்டுபோஸ்" எடுத்தல் அளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

1969 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ந் திகதி மு. ப. 11.00 மணிக்கு மாத்தறைக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

என். அபேவிக்ரம்,
உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
மாத்தறை மாவட்டம்.

## அட்டவணை

### ஆட்டிறைச்சியின் ஆகக்கூடியவிலை

| பத்தி 1<br>இடம் | பத்தி 2<br>ஆட்டிறைச்சி (எலும்பில்லாமல்) ஒரு இருத்தலுக்கான ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>ஆட்டிறைச்சி (எலும்புடன் )ஒரு இருத்தலுக்கான ஆகக்கூடியவிலை<br>ரூ. ச. | பத்தி 4<br>(உயிரற்ற நிறை) ஆட்டிறைச்சி ஒரு இருத்தலுக்கான ஆகக்கூடிய விலை<br>ரூ. ச. |
|---|---|---|---|
| மாத்தறை நகரசபை எல்லையைத் தவிர்ந்த மாத்தறை பரிபாலன மாவட்டத்தைச்சேர்ந்த எல்லா இடங்களும் .. .. .. | 2 50 .. | 2 25 .. | 2 0 |
| மாத்தறை நகர சபை எல்லைப்பகுதிக்குள் .. .. .. | 2 75 .. | 2 40 .. | 2 10 |

**குறிப்பு**.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட ஒரு இருத்தல் ஆட்டிறைச்சி விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகள் அல்ல ; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும். இவ்விலைகளுக்குமேல் விற்கலாகாது.

1—108/2.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது